தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 181 | 4 Pages | 28.1.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 181 | 4 பக்கங்கள் | 28.1.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை**

**விளக்கம்:**
**எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும் எவரிடத்திலும் மனதால் எண்ணி உண்டாகின்ற துன்பச்செயலைச் செய்யாதிருத்தலே நல்லது.**

# மக்களுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பேன்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

மதுரை, ஜன.28

மதுரை அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏலத்தை நிறுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் போராடி வந்தனர். அதுகுறித்து சட்டசபையிலும் தமிழக அரசு சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏலத்தை மத்திய அரசு சமீபத்தில் முழுவதுமாக ரத்து செய்தது.




இதனையடுத்து டங்ஸ்டன் போராட்டக் குழுவினர் நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்தனர். மேலும் அரிட்டாப்பட்டியில் நடைபெறவுள்ள நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்று முதல்அமைச்சருக்கு அழைப்பு விடுத்தனர். மக்களின் அழைப்பை ஏற்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அரிட்டாப்பட்டிக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில் வல்லாளப்பட்டியில் நடைபெறும் நிகழ்ச்சியில் மக்கள் மத்தியில் பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

கிராம மக்களின் அன்புகட்டளையை ஏற்றுக்கொண்டு இங்கு வந்துள்ளேன். நான் வேறு, நீங்கள்வேறுஅல்ல; உங்கள் மகிழ்ச்சியில் பங்கேற்க நான் இங்கு வந்துள்ளேன். உங்களுக்காக நடைபெறும் பாராட்டு விழா என்று தான் இதை கருதுகிறேன். மக்களுக்கு விரோதமான செயல்களை மத்திய பா.ஜ.க. அரசு செய்து வருகிறது.

நான் மக்களுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்பேன். நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என்பது தான் உண்மை. அரிட்டாப்பட்டி மக்களுக்கு என்றும் துணை நிற்போம். டங்ஸ்டன்சுரங்க ஏலத்திற்கு எதிராக போராடி மூன்று மாதத்தில் வெற்றி கிடைத்துள்ளது. இது சாதாரண வெற்றி அல்ல. மாபெரும் வெற்றி. மக்கள் சக்தி மூலம் டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை தடுத்து நிறுத்தி உள்ளோம். மக்கள் போராட்டத்திற்கு மத்திய பா.ஜ.க. அரசு பணிந்துள்ளது. பதவியைபற்றி எனக்குகவலை இல்லை; மக்களை பற்றிதான் எனக்கு கவலை. டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை அரசியலாக்க விரும்பவில்லை. இது மக்கள் பிரச்சினை என்பதில் தெளிவாக உள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

## காஷ்மீர்: திரால் சவுக்கில் முதன்முறையாக பறந்த இந்திய தேசிய கொடி



புல்வாமா, ஜன.28

நாட்டின் 76வது குடியரசு தின கொண்டாட்டங்கள் டெல்லியில் உள்ள கர்தவ்யா பாதை (கடமை பாதை) பகுதியில் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியில் முப்படைகளின் அணிவகுப்பு நடந்தது. பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகளும் இடம் பெற்றிருந்தன.

சுகோய்,தேஜஸ்,ரபேல்உள்ளிட்டவிமானங்களின்வான்சாகசநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதனை முன்னிட்டு, பல்வேறு பகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாகன சோதனை நடத்தப்பட்டது. பல்வேறு இடங்களிலும் சி.சி.டி.வி. கேமிராக்கள் கொண்டு கண்காணிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சூழலில், ஜம்மு மற்றும் காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் திரால் சவுக் பகுதியில் முதன்முறையாக இந்திய தேசிய கொடி பறக்க விடப்பட்டு உள்ளது. இந்த கொடியை 3 தலைமுறையை சேர்ந்தவர்கள் சேர்ந்து ஏற்றி உள்ளனர். இதுபற்றி இந்திய ராணுவம் வெளியிட்ட செய்தியில், வயது முதிர்ந்த நபர், இளைஞர் மற்றும் ஒரு குழந்தை ஆகியோர் சேர்ந்து கொடியை ஏற்றினர். தலைமுறைகளின் ஒற்றுமை மற்றும் தேசத்திற்கான பகிரப்பட்ட உள்ளார்ந்த ஈடுபாடு ஆகியவற்றை இது வெளிப்படுத்துகிறது. இந்த செயல்முறை, ஒளிரும் வருங்காலம் நோக்கிய கூட்டு பயணத்தில், வயது வேற்றுமையின்றி இந்திய மக்களுக்கு இடையேயான வலுவான பிணைப்பு சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்து உள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரின் ஸ்ரீநகரில் பக்சி ஸ்டேடியத்தில் துணை முதல்மந்திரி சுரீந்தர் சவுத்ரி தேசிய கொடியை ஏற்றினார். இந்த வாய்ப்பை வழங்கயதற்கக முதல்மந்திரி உமர் அப்துல்லாவுக்கு தன்னுடைய நன்றியை அவர் தெரிவித்து கொண்டார்.

## 'சனாதன தர்மம் நமது தேசிய மதம்' யோகி ஆதித்யநாத்

லக்னோ, ஜன.28

உத்தர பிரதேசத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த 13ந்தேதி தொடங்கியது. பிப்ரவரி 26ந்தேதி வரை 45 நாட்கள் நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உள்ளது. இதுவரை சுமார் 11.5 கோடி பேர் மகா கும்பமேளாவிற்கு வருகை தந்து திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

இந்தநிலையில்,சனாதனதர்மத்தின்பிரதிநிதியாககும்பமேளாவிளங்குகிறது என்றும், சனாதன தர்மம் நமது தேசிய மதம் என்றும் உத்தர பிரதேச முதல்மந்திரி யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாகதனியார்தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

"சனாதன தர்மம் இந்தியாவின் தேசிய மதம். அதுவே மனிதத்தின் மதம். நமது வழிபாட்டு முறைகளில் வேறுபாடு இருக்கலாம், ஆனால் மதம் ஒன்று தான். அந்த மதம் சனாதன தர்மம். அந்த சனாதன தர்மத்தின் பிரதிநிதியாக கும்பமேளா விளங்குகிறது.

ஒற்றுமையின் செய்தியை மகா கும்பமேளா கொடுக்கிறது. அங்கு பாகுபாடு காட்டப்படுவதில்லை.சனாதனதர்மத்தைவிமர்சித்தவர்கள்,கும்பமேளாவை பார்க்க வாருங்கள் என்று அழைக்கிறோம். திருதராஷ்டிரனைப் போல் இருக்காமல், இங்கு வந்து நேரில் பாருங்கள்.

பிரயாக்ராஜில் நடந்து வரும் மாபெரும் மத நிகழ்வான மகா கும்பமேளா, எந்த ஒரு சாதி அல்லது மதத்திற்கு உட்பட்டது அல்ல. இது அனைத்து மதம், கலாசாரம் மற்றும் சமயங்களின் மாபெரும் கலவையாக திகழ்கிறது." இவ்வாறு யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

## 13வது மாடியில் இருந்து கீழே விழுந்த குழந்தை: துரிதமாக செயல்பட்டு காப்பாற்றிய நபர் வைரல் வீடியோ



மும்பை, ஜன.28

மராட்டிய மாநிலம் தானே மாவட்டம் டும்பு வாலி பகுதியில் அடிக்கு மாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பின் 13வது மாடியில் வசித்துவரும் தம்பதிக்கு 2 வயதில் குழந்தை உள்ளது.

இந்நிலையில், கடந்த வாரம்குடியிருப்பின்13வது மாடியில் இருந்து அந்த 2 வயது குழந்தை எதிர்பாராத விதமாக தவறி விழுந்தது. அப்போது, அப்பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்த பவேஷ் ஹெத்ரா என்ற நபர் குழந்தை கிழே விழுவதை கவனித்துள்ளார். உடனடியாக துரிதமாக செயல்பட்ட அவர் கீழே விழுந்த குழந்தையை தனது கைகளால் பிடித்துள்ளார். ஆனால், குழந்தை பவேசின் கையில் விழுந்து பின்னர் கீழே விழுந்தது. உடனடியாக, குழந்தையை மீட்ட அவர் அருகில் உள்ள மருத்துமனைக்கு கொண்டு சென்றார். இந்த சம்பவத்தில் குழந்தை சிறு காயங்களுடன் உயிர் பிழைத்தது.

13வது மாடியில் இருந்து விழுந்த குழந்தையை பவேஷ் காப்பாற்றிய வீடியோ தற்போது சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. மேலும், பவேஷை பலரும் பாராட்டி வருகின்றனர்.

## நாப்கின் கேட்ட மாணவியை வகுப்புக்கு வெளியே நிறுத்திய அவலம் விசாரணைக்கு உத்தரவு

பரேலி, ஜன.28

உத்தரபிரதேசத்தில் மாதவிடாயின்போது பள்ளிக்கு சென்ற 11ம் வகுப்பு மாணவி ஒருவர் சானிட்டரி நாப்கின் கேட்டதற்கு அவரை வகுப்புக்கு வெளியே நிறுத்திய அவலம் அரங்கேறியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பரேலியில் உள்ள பெண்கள் பள்ளி ஒன்றில் 11ம் வகுப்பு படிக்கும் மாணவி ஒருவர்மாதவிடாயின்போது பள்ளிக்கு தேர்வு எழுத சென்றுள்ளார். அப்போது மாணவிக்கு மாதவிடாய் சுழற்சி தொடங்கியுள்ளது. இதையடுத்து அவர் பள்ளி முதல்வரிடம் சானிட்டரி நாப்கின் கேட்டுள்ளார். ஆனால் பள்ளி முதல்வரோ மாணவிக்கு நாப்கின் கொடுக்காமல் அவரை வகுப்பறைக்கு வெளியே நிற்கும்படி சொன்னதாக கூறப்படுகிறது. சுமார் ஒரு மணிநேரம் மாணவி வகுப்புக்கு வெளியே நின்றுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த மாணவியின் தந்தை இது தொடர்பாக மாவட்ட நீதிபதி, மாவட்ட பள்ளிகள் ஆய்வாளர், மாநில மகளிர் ஆணையம் மற்றும் பெண்கள் நலத்துறைக்கு எழுத்துப்பூர்வமாக புகார் மனுவை அளித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட பள்ளிகள் ஆய்வாளர் கூறியுள்ளார்.

# திண்டிவனம் வட்டார போக்குவரத்து அலுவலர் முக்கண்ணனுக்கு கவர்னரின் வெள்ளி பதக்கம் விழுப்புரம் கலெக்டர் வழங்கினார்

விழுப்புரம், ஜன.28

விழுப்புரத்தில் நடந்த குடியரசு தினவிழா கொண்டாட்டத்தில் திண்டிவனம் வட்டார போக்குவரத்து அலுவலர் முக்கண்ணனுக்கு தமிழக கவர்னரின் வெள்ளி பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் ஆகியவையினை விழுப்புரம் கலெக்டர் பழனி வழங்கி சிறப்பித்தார். திண்டிவனம் வட்டார போக்குவர த்து அலுவலர் முக்கண்ணனுக்கு கவர்னரின் பாராட்டு சான்றிதழில் அவர் கூறியிருப்பதாவது :



முன்னாள் படைவீரர்களின் நலனுக்கான உங்கள் அர்ப்பணிப்பைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் இதற்காக நீங்கள் ரூ. 11,31,800/ ஆயுதப்படைகளின் கொடிநாள்சேகரிப்புக்கு உங்களுக்கு வெள்ளிப் பதக்கத்தை வழங்குவதன் மூலம் உங்கள் நேர்மையான முயற்சிகளுக்கு தமிழ்நாடு நிலையான கொடி நாள் அமைப்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் குடும்பத்தை விட்டு விலகி தேசத்திற்கு சேவை செய்தவர்களுக்கு சேவை செய்யும் இந்த உன்னத பணிக்கு உங்கள் ஆதரவை தொடர்ந்து வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன். இவ்வாறு அந்த பாராட்டு சான்றிதழில் தமிழக கவர்னர்குறிப்பிட்டுள்ளார்.

# தினசரி 80 ஆயிரம் டன் முதல் 1 லட்சம் டன் வரை கனிமங்கள் கர்நாடகாவிற்கு சட்ட விரோதமாக கடத்தல்: தமிழக கனிம வளத் துறையில் ஊழல் களமிறங்குகிறது

கிருஷ்ணகிரி, ஜன.28

தினசரி 80 ஆயிரம் டன் முதல் 1 லட்சம் டன் வரை கனிமங்கள் கர்னாடகாவிற்கு சட்ட விரோதமாக கடத்தல்: தமிழக கனிம வளத் துறையில் ஊழல் களமிறங்குகிறது

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தமிழக அரசு அனுமதியுடன் செயல்படும் கல்குவாரிகளிலிருந்து தினசரி 80,000 முதல் 1,00,000 டன் கனிமங்கள் கர்னாடகாவிற்கு ஒசூர் வழியாக கடத்தப்படுவது தொடர்கிறது. இந்த சட்டவிரோத நடவடிக்கையால் தமிழக அரசுக்கு கோடிக்கணக்கான வரி வருவாய் இழப்பு ஏற்பட்டு, மக்கள் நலத்திற்கான பணிகள் பாதிக்கப்படுகின்றன.



குறிப்பிட்ட பிரச்சினைகள்:கர்நாடகாவிற்கு கனிம கடத்தல்: தமிழகத்தின் கனிம வளங்கள், குறிப்பாக M.சாண்ட் மற்றும் ஜல்லி போன்றவைகள், ரோட்டுப் போக்குவரத்து மற்றும் சுங்கச் செக்போஸ்டுகளை மீறி கர்னாடகாவிற்கு கொண்டு செல்லப்படுகின்றன. சட்டவிரோத செயல்பாடுகள்: RTI தகவலின் படி, அனுமதிக்கப்படாத கனிம உற்பத்தி நிலையங்கள் மற்றும் வாகனங்களின் மூலம் சட்டவிரோதமாக கனிமங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அலுவலக முறைகேடுகள்: கனிம வள துறையில் கணினிமயமாக்கப்பட்ட பிறகும், பேனாவில் எழுதும் முறை தொடர்ந்து ஊழலுக்கு வழிவகுக்கிறது. உயர் நீதிமன்ற உத்தரவை மீறுதல்: கனிமங்களை அனுமதி இல்லாமல் அண்டை மாநிலங்களுக்கு கடத்துவது, 2019 மதுரை உயர்நீதிமன்ற உத்தரவை முற்றிலும் மீறுகிறது. கோரிக்கைகள்:தமிழக எல்லைகளில் செக்போஸ்டுகளை அமைத்து கனிம கடத்தலை தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். M.சாண்ட் உற்பத்திக்கான புதிய சட்ட விதிகளை உருவாக்கிதரமற்றதயாரிப்புகளை தவிர்க்க வேண்டும். அனுமதி இல்லாமல் இயங்கும் குவாரிகள் மற்றும் கிரஷர்களை மூடக்கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். கனிம வள சட்டங்களை மீறியவர்கள் மீது கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். திடீர் நடவடிக்கை இல்லாவிட்டால்:அரசு பிப்ரவரி மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால், தமிழக மக்கள் ஆளுநரை நோக்கி நடைப்பயணம் மேற்கொள்ளதிட்டமிட்டுள்ளனர். இதுகுறித்த விவரங்களை சென்னையில் உள்ள அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் பார்வையில் கொண்டு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

# குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னை பத்திரிக்கையாளர் மன்றம் நடத்திய கேரம்போர்டு போட்டி வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது

சென்னை, ஜன.28

குடியரசுதினத்தைமுன்னிட்டு சென்னை பத்திரிக்கையாளர் மன்றம் நடத்திய கேரம்போர்டு போட்டி வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது




சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தின் சார்பில் தலைவர் M. சுரேஷ் வேதநாயகம், துணைத் தலைவர் J. மதன், K. சுந்தர பாரதி, பொதுச் செயலாளர் M. ஹாசிப், இணைச் செயலாளர் நெல்சன் சேவியர், பொருளாளர் S. மணிகண்டன் ஜெயா மற்றும் குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு குடியரசு தினத்தை யொட்டி கேரம்போர்டு போட்டி நடத்தினர்.

போட்டியை துவக்கி வைத்தது திரு மருத்துவர் இ. ரா. வைத்தியநாதன் இ,ஆ.பா. வெற்றி பெற்றோருக்கு பரிசுகளை திருஜெ. மோகநாதர்ரெட்டி இ,ஆ.பா வழங்கினார்.

முதலாம் பரிசாக ரூபாய் 10,000, இரண்டாம் பரிசாக ரூபாய் 5,000, மூன்றாம் பரிசாக ரூபாய் 2,000 காசோலையாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு பத்திரிக்கையாளர்களிடையே ஒற்றுமையை ஊக்குவிக்கும் விதமாக அமைந்தது.

# நெல்லை அருகே இளம்பெண் கூட்டு பாலியல் பலாத்காரம்

நெல்லை, ஜன.28

நெல்லை அருகே மானூரை அடுத்த வெங்கலபொட்டல் பகுதியைச் சேர்ந்தவர் குமரேசன். இவருடைய மகன் சுபாஷ் (வயது 37). இவர் நெல்லையில் ரெயில்வே ஊழியராக பணியாற்றி வருகிறார். இவருக்கு புதுச்சேரியைச் சேர்ந்த 29 வயதான இளம்பெண் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டது.

சம்பவத்தன்று ஜெபக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த அந்த இளம்பெண், சுபாஷை தொடர்பு கொண்டு பேசினார். தொடர்ந்து இளம்பெண்ணை சுபாஷ் நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள ஓட்டலுக்கு அழைத்து சென்றார்.

அங்கு இளம்பெண்ணுக்கு மதுபானம் வாங்கி கொடுத்த சுரேஷ் பின்னர் அவரை தனது வீட்டுக்கு அழைத்து சென்றார்.

அங்கு சுபாஷின் நண்பரும், அரசு பஸ் டிரைவருமான மானூர் ரஸ்தாவைச் சேர்ந்த பிச்சையா மகன் முருகேஷ் (37) என்பவரும் வந்துள்ளார். இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த அந்த இளம்பெண் அவர்களிடம் இருந்து தப்பித்து செல்ல முயன்றார். ஆனால் அவர்கள் அந்த இளம்பெண்ணை வீட்டில் உள்ள ஒரு அறையில் அடைத்து வைத்து கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாககூறப்படுகிறது.

அதன்பின்னர் இளம்பெண் அவர்களிடம் இருந்து தப்பித்து, நெல்லை தாலுகா அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில், சுபாஷ், முருகேஷ் ஆகியோர் மீது கூட்டு பலாத்காரம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவர்கள் இருவரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி பாளையங்கோட்டை சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் நெல்லையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# அம்பேத்கர் வகுத்த அரசியலமைப்புக்கு பா.ஜனதாவால் பேராபத்து: ப.சிதம்பரம்



மதுரை, ஜன.28

மதுரை புதூரில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற குடியரசு தின விழா பொதுக் கூட்டத்தில் முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் பேசியதாவது:

நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பலம் பெற்று மத்தியில் பா.ஜனதா அரசு ஆட்சியில் உள்ளது. ஆனால் நாட்டின் குடிமக்களுக்கான ஆட்சியாக அமைந்துள்ளதா? என்றால் இல்லை. பா.ஜனதா அரசு பொறுப்பேற்ற பின்பு இந்தியா வளர்ச்சி பாதையில் செல்கிறது என நரேந்திரமோடி கூறி வருகிறார். இது ஏற்புடையதல்ல. காரணம், அவருக்கு முன்னால் ஆட்சி செய்த ஜவகர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, மன்மோகன் சிங் உள்ளிட்ட பிரதமர்கள் உருவாக்கிய அஸ்திவாரத்தில் தான் பா.ஜனதா இன்று பயணித்து வருகிறது.

நமது நாட்டில் 144 கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் 20 கோடி பேர் ஏழைகளாக உள்ளனர். ஏழைகளின் விவசாயக் கடன், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை பா.ஜனதா நிறைவேற்றுவதில்லை. ஆனால் பெரு முதலாளிகள் வங்கியில் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்கிறது. தற்போது, அம்பேத்கர் வகுத்த அரசியலமைப்புக்கு பா.ஜனதாவால் பேராபத்து வந்துள்ளது. அவற்றை பாதுகாக்க வேண்டும் என்றால் பா.ஜனதா ஆட்சியிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றார்.

# காதலி பேச மறுத்ததால் கல்லூரி மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை



சென்னை, ஜன.28

திருவண்ணாமலை மாவட்டம் தொண்டமானூர் கிராமத்தை சேர்ந்தவர் சுதேசி (வயது 19). இவர், சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள அரசு விக்டோரியா ஆண்கள் விடுதியில் தங்கியிருந்து, மாநில கல்லூரியில் பி.எஸ்சி. 2ம் ஆண்டு படித்து வந்தார்.

சுதேசி, நேற்று முன்தினம் வழக்கம்போல் கல்லூரிக்கு சென்றுவிட்டு விடுதியில் உள்ள தனது அறைக்கு திரும்பி வந்தார். அறையில் யாரும் இல்லாத நேரத்தில் சுதேசி, மின்விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதனை கண்டு அதிர்ச்சியடைந்த அவரது நண்பர்கள், திருவல்லிக்கேணி போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் சுதேசி உடலை பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், சுதேசி தனது சொந்த ஊரில் இளம்பெண் ஒருவரை காதலித்து வந்ததும், கருத்து வேறுபாடு காரணமாக அந்த பெண்.

சுதேசியிடம் சரியாக பேசாமல் இருந்ததும் தெரியவந்தது. காதலி பேசாததால் ஏற்பட்ட விரக்தியில் சுதேசி தற்கொலை செய்து கொண்டதும் தெரிந்தது. இருப்பினும் அவரது தற்கொலைக்கு வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளதா? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# சென்னை காவல்துறையில் 59 வயது போலீசாருக்கு இரவு பணி கிடையாது: கமிஷனர் அறிவிப்பு



சென்னை, ஜன.28

சென்னை காவல்துறையில் இரவு ரோந்து பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இப்பணியில் 59 வயதுடைய சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்களும் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் வயது மூப்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு இரவு ரோந்து பணியில் இருந்து கமிஷனர் அருண் விலக்களித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது:

சென்னை போலீஸ் துறையில் ஓராண்டு காலத்திற்குள் பணி ஓய்வுபெற உள்ள 59 வயது நிரம்பிய போலீசாரின் வயது மூப்பையும், தங்களது நீண்ட பணிகாலத்தில் அவர்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றிய மக்கள் பணியையும், கடின உழைப்பையும் கருத்தில் கொண்டு, 59 வயது நிரம்பிய காவலர் முதல் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் வரையிலான அனைத்து போலீசாருக்கும் இரவு பணியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக வரும் காலங்களில் 59 வயதை எட்டும் போலீசார் அனைவருக்கும், அவர்கள் பணி ஓய்வுபெறும் நாள் வரை ஓராண்டு காலத்துக்கு இரவு பணியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று அனைத்து போலீஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் 33 பேர் கைது



ராமேஸ்வரம், ஜன.28

ராமேசுவரத்தை சேர்ந்த மீனவர்கள் தனுஷ்கோடி தலைமன்னார் இடையே நேற்று நள்ளிரவு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கே கடற்படை கப்பலில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர்,

மேற்கண்ட மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி 2 விசைப்படகுகளில் சென்றிருந்த 18 மீனவர்களை கைது செய்தனர். இந்த நிலையில், மேலும் ஒரு விசைப்படகையும் அதிலிருந்த 15 மீனவர்களையும் சிறைபிடித்துச் சென்றுள்ளனர். இலங்கை கடற்படையால் ஒரே நாளில் தமிழக மீனவர்கள் 33 பேர் கைது செய்யப்பட்டிருப்பது மீனவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பள்ளியில் மின்சாரம் தாக்கி மாணவன் பலி: தலைமை ஆசிரியர் பணியிடை நீக்கம்

சிவகங்கை, ஜன.28

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா பத்தரசன்கோட்டை கிராமத்தை சேர்ந்த கைலாசம் என்பவருடைய மகன் சக்தி சோமையா (வயது 14). சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை அடுத்த பொய்யாவயல் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தான். நேற்று முன்தினம் கம்ப்யூட்டர் பயிற்சிக்காக பள்ளியில் கம்ப்யூட்டரை இயக்க சுவிட்சை தொட்ட போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சக்தி சோமையா உயிரிழந்தான்.

இந்த சம்பவம் குறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து மற்றும் கல்வித்துறை அதிகாரிகள், பள்ளிக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர். இதையடுத்து பள்ளி தலைமை ஆசிரியர் கணேசனை, பணியிடை நீக்கம் (சஸ்பெண்டு) செய்து முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், இதில் அஜாக்கிரதையாக இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதன்மை கல்வி அலுவலர் தெரிவித்தார். பலியான மாணவனின் குடும்பத்திற்கு, முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.5 லட்சம் வழங்க முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்குள் செல்போன் கொண்டு செல்ல தடை



விருதுநகர், ஜன.28

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோவில் உள்ளது.

இந்த கோவிலுக்கு தினமும் தமிழகம் மட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து தரிசிக்கின்றனர்.

ஏற்கனவே மதுரை மீனாட்சி அம்மன், திருச்செந்தூர், பழனி உள்ளிட்ட கோவில்களுக்குள் பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் செல்போன்கள் பாதுகாப்பு அறை ஏற்படுத்தப்பட்டு, தரிசனம் முடித்து வரும்வரை பக்தர்களின் செல்போன்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு உள்ளேயும் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்தது. இதற்காக கோவில் முன்பு செல்போன்கள் பாதுகாக்கும் அறை அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அறையில் வைக்க ஒவ்வொரு செல்போனுக்கும் ரூ.5 கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டதால் பக்தர்கள் பாதுகாப்பு அறையில் செல்போனை வைத்து சென்றனர். ஆண்டாள் கோவிலில் குடியரசு தினத்தை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஆன்லைன் செயலி மூலம் கஞ்சா விற்பனை.. சிறுவன் உள்பட இருவர் கைது

சென்னை, ஜன.28

சென்னைதிரு.வி.க.நகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருபாநிதி மற்றும் சப் இன்ஸ்பெக்டர் சின்னதுரை தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அங்கு சந்தேகப்படும்படியாக இருந்த 2 பேரை மடக்கிப்பிடித்து சோதனை செய்தனர். அவர்களிடம் 1500 கிராம் கஞ்சா இருப்பது தெரியவந்தது. அதை பறிமுதல் செய்த போலீசார் இருவரையும் போலீஸ் நிலையம் அழைத்துச்சென்று விசாரித்தனர்.

விசாரணையில் அவர்கள், பெரவள்ளூர், பாக்யம் தெருவைச் சேர்ந்த நிக்கேஷ் (வயது 19) மற்றும் அதே பகுதியை சேர்ந்த 17 வயது சிறுவன் என்பதும் தெரியவந்தது. இவர்கள் ஆந்திர மாநிலம் சித்தூரில் உள்ள குமாரி என்பவரிடம் இருந்து ரூ.25 ஆயிரம் கொடுத்து 2 கிலோ கஞ்சாவை வாங்கி வந்து, ஆன்லைன்செயலியான 'டெலிகிராம்' மூலம் விற்பனை செய்து வந்தது தெரிந்தது.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் 2 பேரையும் கைது செய்தனர். பின்னர் கைதான நிக்கேசை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். சிறுவனை, சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பி வைத்தனர்.

# போலீஸ் சீருடையில் இணையத்தை கலக்கும் டி.ஐ.ஜி. தம்பதி



திருச்சி, ஜன.28

திருச்சி சரக போலீஸ் டி.ஐ.ஜி.யாக பணிபுரிந்து வருபவர் வருண்குமார். இவரது மனைவியான வந்திதாபாண்டே திண்டுக்கல் சரக போலீஸ் டி.ஐ.ஜி.யாக பணியாற்றி வருகிறார். ஐ.பி.எஸ். தம்பதியான இவர்கள் இருவரும் கடந்த டிசம்பர் மாதம் தான் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு என்ற நிலையில் இருந்து டி.ஐ.ஜி.க்களாக பதவி உயர்வு பெற்றனர்.

இவர்கள் சமூக வலைத்தளங்களில் அவ்வப்போது இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் வீடியோ மற்றும் படங்கள் பதிவிடுவது வழக்கம். அந்தவகையில் நாட்டின் 76வது குடியரசு தின விழாவையொட்டி நேற்று வந்திதா பாண்டே தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒரு வீடியோவை 'ரீல்ஸ்' ஆக பதிவிட்டு உள்ளார்.

அதில் மாவட்ட கண்காணிப்பாளர் பதவியில் இருந்து சரக துணைத்தலைவர் பதவிக்கான அந்தஸ்து உயர்வின்போது தங்களது சீருடையில் ஸ்டார் மற்றும் அசோக சக்கர முத்திரை அடையாளங்களை ஒருவருக்கொருவர் மாற்றி அணிவிக்கும் காட்சிகள் பின்னணி இசையுடன் இடம்பெற்றுள்ளது.

சமூக வலைத்தள பதிவுகளில் இந்த தம்பதியை பின்பற்றுபவர்கள் இவர்களைவாழ்த்தியும், பாராட்டியும் தங்களது கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள். அதிகார இணையர் (பவர் கப்பிள்), உங்களது சேவை நாட்டிற்கு தேவை என்றெல்லாம் 'கமெண்ட்ஸ்' குவிந்து வருகிறது.

# சென்னை மின்சார ரெயில்களில் தினந்தோறும் 8.5 லட்சம் பேர் பயணம்

சென்னை, ஜன.28

நாட்டின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னை ரெயில்வே கோட்டம் சார்பில் அயனாவரத்தில் உள்ள ரெயில்வே பாதுகாப்பு படையினர் மைதானத்தில் சென்னை ரெயில்வே கோட்ட மேலாளர் விஸ்வநாத் ஈர்யா தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இதைத்தொடர்ந்து, நிகழ்ச்சியில் சென்னை ரெயில்வே கோட்ட மேலாளர் விஸ்வநாத் ஈர்யா பேசியதாவது:

சென்னை கோட்டத்தில் ரெயிலை தினந்தோறும் 11 லட்சத்து 50 ஆயிரம் பயணிகள் பயன்படுத்துகின்றனர். அதில் 8.5 லட்சம் பயணிகள் மின்சார ரெயிலையும், 3 லட்சம் பயணிகள் மற்ற ரெயில்களையும் பயன்படுத்துகின்றனர். சென்னை ரெயில்வே கோட்டம் கடந்த டிசம்பர் வரை ரூ.3 ஆயிரத்து 300 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 7.31 டன் சரக்குகளை கையாண்டுள்ளது. அம்ரித் பாரத் ரெயில் நிலைய மேம்பாடு திட்டத்தின் கீழ் 17 ரெயில் நிலையங்கள் ரூ.200 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ரூ.160 கோடி மதிப்பில் 21 ரெயில் நிலையங்களில் நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ஆகிய 3 ரெயில் முனையங்கள் செயல்பட்டு வரும் நிலையில், 4வது ரெயில் முனையத்தை பெரம்பூர் வில்லிவாக்கம் இடையே அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான அறிக்கை தயார் செய்து ரெயில்வே வாரியத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னைகூடூர், சென்னைஜோலார்பேட்டை, அரக்கோணம் ரேணிகுண்டா ஆகிய ரெயில் வழித்தடங்களில் 130 கி.மீ வேகத்தில் ரெயில்கள் இயக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் 40 ரெயில் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு 99 ரெயில் நிலையங்களில் கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மாமல்லபுரத்தில் தற்காலிக குடில் அமைத்து வாழும் இருளர்கள் குடியரசு தினத்தில் கோரிக்கை



மாமல்லபுரம், ஜன.28

மாமல்லபுரம் கடற்கரை கோயில் தென்பகுதி கடலோரத்தில் பல ஆண்டுகளாக 80க்கும் மேற்பட்ட இருளர்கள் தற்காலிக குடில் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு குடியிருப்பு வசதி, ஜாதி சான்றிதழ், ரேஷன் கார்டு, பிறப்பு சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய வசதிகள் இன்றி குடும்பத்துடன் பாதுகாப்பற்ற நிலையில் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் இன்று முதல் முறையாக 76வது குடியரசு தினத்தை கொண்டாடும் வகையில், அனைத்து குடில் குடியிருப்பு வாசிகளும் ஒன்று சேர்ந்து அப்பகுதியில் தேசியக்கொடி ஏற்றினர்.

பின்னர் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி, சுதந்திர தினத்திற்குள் தங்களுக்கு அத்தியாவசிய வாழ்வாதார குடியுரிமை வசதிகள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுதிமொழி ஏற்றனர். மாமல்லபுரம் பேரூராட்சி தலைவர் வளர்மதி எஸ்வந்தராவ், சமூக ஆர்வலர் மேத்யு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆந்திராவில் இருந்து மோட்டார் சைக்கிளில் குட்கா கடத்தி வந்த திருநங்கை கைது

ஊத்துக்கோட்டை, ஜன.28

ஊத்துக்கோட்டை அருகே உள்ள பென்னாலூர்பேட்டை ஆந்திரா தமிழக எல்லையில் உள்ளது. இந்த கிராமம் வழியாக ஆந்திராவில் இருந்து சென்னைக்கு குட்கா கடத்தி செல்வதாக திருவள்ளூர் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாளுக்கு தகவல் கிடைத்தது. அவரது உத்தரவின் படி பென்னாலூர் பேட்டை போலீசார் கட்சூர்மேடு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வேகமாக நிற்காமல் சென்ற வரை போலீசார் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் விரட்டி சென்று மடக்கிப் பிடித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சோதனை செய்த போது தடை செய்யப்பட்ட 7 கிலோ குட்கா கடத்தி வந்திருப்பது தெரிந்தது. அதை பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் மோட்டார் சைக்கிளில் குட்கா கடத்திவந்தது திருவள்ளூர் அடுத்த காக்கலூர் கிராமத்தை சேர்ந்த ஹரிணி (33) என்ற திருநங்கை என்று தெரிந்தது. அவரை போலீசார் கைது செய்தனர்.

பின்னர் ஊத்துக்கோட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். ஆந்திராவில் இருந்து கடத்தி வரப்பட்ட குட்காவை சென்னையில் விற்பனை செய்ய முயன்றது போலீசாரின் விசாரணையில் தெரிய வந்தது.

# பார்மலின் ரசாயனம் கலந்த மீன்கள் விற்பனையா?

ராயபுரம், ஜன.28

காசிமேடு துறைமுகத்தில் சுமார் 150க்கும் மேற்பட்ட குடோன்களில் மீன்களை பதப்படுத்தி வெளிநாடுகள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

தரமற்ற மீன்கள் ரசாயனத்தால் பதப்படுத்தப்பட்டு வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுவதாகவும், உள்ளூர் மீன்களுடன் இந்த மீன்களும் விற்பனை செய்யப்படுவதாகவும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு புகார்கள் வந்தது.

இந்த நிலையில் உணவு பாதுகாப்புத் துறை நிய மன அலுவலர் டாக்டர் சதீஷ்குமார் மற்றும் செல்வம், சதாசிவம் மற்றும் அதிகாரிகள் நேற்று காசிமேட்டில் உள்ள 20 மீன்கு டோன்களில் ஆய்வு செய்தனர். அப்போது 2 கடைகளில் இறால் மற்றும் மீன்கள் கெட்டுப்போய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மொத்தம் 450 கிலோ கெட்டுப்போன மீன்களை பினாயில் ஊற்றி அதிகாரிகள் அழித்தனர். இதையடுத்து அந்த 2 கடைகளுக்கும் ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து எச்சரித்தனர்.

மேலும் இந்த மீன்களில் பார்மலின் என்னும் இறைச்சி கெட்டுப்போவதை தடுக்கும் ரசாயனம் கலக்கப்பட்டு இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் அடைந்து உள்ளனர். இதைத் தொடர்ந்து 6 மாதிரிகளை சோதனைக்காக எடுத்துச் சென்றனர்.

இதுகுறித்து சுகாதார அதிகாரிகளிடம் கேட்டபோது, மீன்களின் மாதிரியை பரிசோதனைக்கு அனுப்பி உள்ளோம். பரிசோதனை முடிவில் மீன்களில் பார்மலின் ரசாயனம் கலக்கப்பட்டு உள்ளதா? இல்லையா? என்பது தெரியவரும். இந்த முடிவு வர 6 நாட்கள் ஆகும். இந்த பார்மலினை இறைச்சிகளில் கலந்தால் அதிக நாட்கள் கெட்டுப்போகாமல் இருக்கும் தன்மை உடையது. ஆனால் அது மனிதர்களின் உடலுக்கு நல்லது அல்ல. கடும் பாதிப்பை ஏற்படுத்தும். பரிசோதனை முடிவை வைத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

காசிமேடு சந்தையில் ரசாயனம் கலந்த மீன் விற்பனை நடைபெறுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு மீன்பிரியர்களை அதிர்ச்சி அடைய செய்து உள்ளது. அதிகாரிகள் அடிக்கடி மீன் சந்தைகளில் ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நா.த.க. இருந்து சேலம் மாவட்ட நிர்வாகிகள் விலகல்

சென்னை, ஜன.28

நாம் தமிழர் கட்சியின் மாநில, மண்டல, மாவட்ட நிர்வாகிகள் பலரும் அக்கட்சியில் இருந்து விலகுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் சேலம் மாவட்ட நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். சேலம் மாவட்ட பொருளாளர் சதீஷ் தலைமையில் 30க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கட்சியில் இருந்து விலகி உள்ளனர். 2021 சட்டசபை தேர்தலில் நா.த.க. சார்பில் சேலம் மேற்கில் போட்டியிட்ட நாகம்மாள் கட்சியில் இருந்து விலகி உள்ளார். நாம் தமிழர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் விலகுவதாக தெரிவித்துள்ள நிர்வாகிகள், அதற்கான காரணம் ஏதும் கூறவில்லை.

# ஊத்தங்கரையில் டாஸ்மார்க் ஊழியர்கள் திடீர் கைது

ஊத்தங்கரை, ஜன.28

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மார்க் கடை விற்பனையாளர்கள் கடை முடிந்து கணக்கு வழக்குகளை ஒப்படைத்துவிட்டு வீடு திரும்பும் வேலையில் ஊத்தங்கரை போலீஸாரால் திடீரென கைது செய்யப்பட்டு ஊத்தங்கரை தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.



சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தின் முன்பு சம்பள உயர்வு பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்த இருந்த நிலையில் அந்தந்த பகுதியை சேர்ந்த ஊழியர்கள் பஸ்கள் மூலமாக சென்னைக்கு செல்ல முற்பட்டனர். இந்த நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பணியாற்றி வரும் டாஸ்மாக் ஊழியர்களை போலீசார் கைது செய்தனர். அப்பொழுது டாஸ்மார்க் ஊழியர் அண்ணாமலை என்பவர் உரிமைகளுக்காகபோராட சென்னையில் ஒன்றுகூட இருந்த டாஸ்மாக் ஊழியர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கை கைது செய்துஉள்ளதாக கூறுகின்றனர்.

எங்களது உரிமைகளை மீட்க கூட எங்களுக்கு ஏன் அனுமதி அளிக்க மறுக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பினர்.

கைதானவர்களில் சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக மாத்திரை கூட எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் போலீசார் கைது செய்துள்ளதாக குற்றம் சாட்டினர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களுக்கு போலீசாரால் சார்பில் குடிநீர், உணவு ஏதும் வழங்காமல் பனிக்காலத்தில் தவிக்க விட்டதாகவும் இதனால் உடல் நலம் பாதிப்பு ஏற்படுவதாகவும் வேதனை தெரிவித்துள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட நபர்கள் ஊத்தங்கரை பேரூராட்சி திருமண மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

# குடியரசு தினவிழா: சிதம்பரம் நடராஜர் கோவிலில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது

சிதம்பரம், ஜன.28

சிதம்பரம் நடராஜர் கோவிலில் 142 அடி உயர முள்ள கிழக்கு ராஜகோபுரத்தில் இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

நாட்டின் 76வது குடியரசு தினவிழா இன்று நடைபெறுகிறது. இந்தியாவிலேயே குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின விழா வன்று சிதம்பரம் நடராஜர் கோவிலில் கிழக்கு ராஜ கோபுரத்தில் கொடி ஏற்றும் விழா நடைபெறுகிறது. அதன் படி சிதம்பரம்



நடராஜர் கோவிலில் இந்திய தேசியக் கொடியை வெள்ளித் தட்டில் வைத்து நடராஜப் பெருமானின் திருவடியில் வைத்துபூஜிக்கப்பட்டு மேள தாளங்கள் முழங்க நடராஜப் பெருமானின் கனக சபையிலிருந்து வெள்ளித் தட்டில் இந்தியதேசியக்கொடியை வைத்து வேத மந்திரங்கள், தாள வாத்தியங்கள் முழங்க 142 அடி உயரமுள்ள கிழக்கு ராஜகோபுரத்தில் இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

இந்நிகழ்வில் சிதம்பரம் நடராஜர்கோவில் செயலாளர் வெங்கடேச தீட்சதர் மற்றும் தீட்சர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

# பொன்னேரி: 30 வழக்குகளில் தொடர்புடைய ரவுடி கைது

பொன்னேரி, ஜன.28

பொன்னேரி ரெயில் நிலையம் சின்ன வேண் பாக்கம் ரெயில்வே பாலம் அருகே நடந்து செல்பவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த பொன் னேரி அடுத்த பள்ளம் பகுதியைச் சேர்ந்தவர் கார்த்திக் என்பவரை இன்ஸ்பெக்டர் குணசேகரன் மற்றும்போலீசார்கைது செய்தனர்.



அப்போது போலீசாரை கண்டதும் தப்பி ஓடிய போது ரெயில்வே பாலத்தில் இருந்து தவறி கீழே விழுந்ததில் கார்த்திக்கின் வலது காலில் முறிவு ஏற்பட்டு மாவு கட்டு போடப்பட்டது. அவர் மீது கொலை வழக்கு உள்ளிட்ட 30 வழக்குகள் உள்ளதாக போலீசார்தெரிவித்தனர்.

# மாமல்லபுரம் அருகே 500 தேக்கு மரங்கள் வெட்டி கடத்தல்

மாமல்லபுரம், ஜன.28

மாமல்லபுரம் அடுத்த கடம்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட மேலகுப்பம் பகுதியில் கடந்த 2006ம் ஆண்டு ஊராட்சி சார்பில் தேக்கு, பனை, தென்னை, மாமரம் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்ட மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டது. இந்த மரங்கள் தற்போது நன்கு வளர்ந்த நிலையில் இருந்தன. இந்த மரங்கள் ஏராளமான மயில்கள் உள்ளிட்ட பறவைகளுக்கு வாழ்விடமாகவும் இருந்தது. இந்நிலையில் இங்கிருந்த சுமார் 500 தேக்கு மரங்களை நள்ளிரவில் மர்ம கும்பல் எந்திரத்தால் வெட்டி கடத்தி சென்று விட்டனர்.



தற்போது அங்கு தேக்கு மரக்கிளைகள் மட்டும் குவிந்து கிடக்கிறது. மேலும் அங்கிருந்த சுமார் 100 மயில்களும் மாயமாகி விட்டதாக கூறப்படுகிறது. இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த கடம்பாடி ஊராட்சி பொதுமக்கள் வனத்துறை, மற்றும் மாமல்லபுரம் போலீசில் புகார் செய்தனர்.

போலீசார் தேக்குமரங்களை வெட்டி கடத்திய கும்பல் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். மேலும் திருக்கழுகுன்றம் தாசில்தார் ராதா உத்தரவின் பேரில் வருவாய் ஆய்வாளர் புஷ்ப ராஜ், கிராம நிர்வாக அதிகாரி நரேஷ் ஆகியோர் வெட்டப்பட்ட மரங்களை கணக்கெடுத்து வருகின்றனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறும் போது,

இப்பகுதியில் மனைப்பிரிவு விரிவாக்கம் செய்வதற்காக இந்த மரங்களை மர்ம நபர்கள் வேரோடு வெட்டி சாய்த்து உள்ளனர். அவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கா விட்டால் மிகப்பெரிய மறியல் போராட்டம் நடத்துவோம் என்றனர்.

# சென்னை மறைமலைநகரில் வணிகர் தின மாநில மாநாடு கொளத்தூர் த.ரவி அறிவிப்பு

சென்னை, ஜன.28

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்க பேரமைப்பு மாநிலத் தலைவர் கொளத்தூர் த.ரவி நெல்லையில் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக மே.5ந்தேதி வணிகர் தினமாநில மாநாடு ஒவ்வொரு ஆண்டும் மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சென்னை மறைமலைநகரில் 42 வது வணிகர் தினம் 7வது மாநிலமாநாடு நடைபெற உள்ளது. சென்னை மறைமலைநகர் நகராட்சி திடலில் மிகபிரமாண்டமாக இந்த மாநாட்டை நடத்த முடிவு செய்து உள்ளோம்.



"வணிக விரோத சட்டங்கள் எதிர்ப்பு மாநாடு" என்ற தலைப்பில் இந்த மாநாடு நடத்தப்பட உள்ளது. இந்த மாநாடு வணிகர்களின் திருப்புமுனை மாநாடாக அமையும்.

இதற்கான ஏற்பாடுகளை செங்கல்பட்டு நிர்வாகிகள்மற்றும்அனைத்து மாவட்ட நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

வணிகர் நலன் கருதி இந்த மாநாட்டில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்கிறார்கள்.

மாநாட்டில் தமிழ்நாடு முழுவதும் இருந்து லட்சக்கணக்கான வணிகர்கள் குடும்பத்துடன் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு கொளத்தூர் த.ரவி கூறினார்.

# பூண்டி ஏரியில் இருந்து 1 டி.எம்.சி. தண்ணீர் வீணானது

ஊத்துக்கோட்டை, ஜன.28

சென்னைநகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி ஏரி உள்ளது. இதில் மழைநீர்மற்றும்கிருஷ்ணா நதி பங்கீடு திட்டத்தின் படி ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் தண்ணீரை சேமித்துவைத்து தேவைப்படும் போது புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்து விடப்படுவது வழக்கம்.

பூண்டி ஏரியின் உயரம் 35 அடியாகும். இதில் 3.231 டி.எம்.சி. தண்ணீர் சேமித்து வைக்கலாம். கடந்த மாதம் வடகிழக்கு பருவமழையின் போது பெய்த பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகமாகி முழு கொள்ளளவை எட்டியது.

இதையடுத்து கடந்த மாதம் 12ந் தேதி உபரி நீர் மதகுகள்வழியாககொசஸ் தலை ஆற்றில் திறந்து விடப்பட்டது. பின்னர் நீர்மட்டம் குறைந்ததால் உபரிநீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த திடீர் மழையாலும் பூண்டி ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்து மீண்டும் முழு கொள்ளளவை எட்டியது.

இதையடுத்து பூண்டி ஏரியில் இருந்து 450 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்படுகிறது. மேலும் ஏரிக்கு தொடர்ந்து 450 கனஅடி தண்ணீர் இன்னும் வந்து கொண்டு இருக்கிறது.

கடந்த மாதம் முதல் உபரிநீர் வீணாக கடலில் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. சுமார் 1 டி.எம்.சி. தண்ணீர் இப்படி வீணாக கடலில் போய் சேர்ந்துள்ளது. இது சென்னை மக்களின் ஒரு மாத குடிநீர் தேவை ஆகும். புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளும் நிரம்பி உள்ளதால் பூண்டி ஏரியில் இருந்து இந்த ஏரிகளுக்கு தண்ணீர் அனுப்ப முடியாத நிலை உள்ளதால் உபரிநீராக வெளியேற்றப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

பலத்தமழையின்போது பூண்டி ஏரி நிரம்பும் போதெல்லாம் உபரி நீர் வீணாக கடலில் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளில் இருந்து திறந்து விடும் தண்ணீரும் வீணாக கடலில் போய் சேர்ந்து கொண்டிருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு உபரி நீரை சேமிக்கும் வகையில் புதிய திட்டங்களை செயல்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கேரட் சாப்பிட்டு விளையாடிய 2 வயது சிறுமி திடீர் சாவு

ராயபுரம், ஜன.28

பழைய வண்ணாரப் பேட்டை, தட்டாங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் விக்னேஷ். இவரது மனைவி பிரமிளா. இவர்களது 2 வயது மகள் லத்திஷா. நேற்று மதியம் பிரமிளா குழந்தையுடன் கொருக்குப்பேட்டையில் உள்ள தாய் வீட்டிற்கு வந்தார்.

அப்போது வீட்டில் இருந்த கேரட்டை லத்திஷா சாப்பிட்டாள். பின்னர் அவள் வீட்டில் விளையாடி கொண்டு இருந்தாள். திடீரென குழந்தை லத்திஷா மயங்கி விழுந்தாள்.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த தாய் பிரமிளா குழந்தையை மீட்டு வண்ணாரப்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்.



பின்னர் மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்த போது வரும் வழியிலேயே குழந்தை லத்திஷா இறந்த விட்டதாக தெரிவித்தனர்.

குழந்தை லத்திஷா எப்படி இறந்தாள் என்பது மர்மமாக உள்ளது. இது குறித்து கொருக்குப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஏரியூர் அருகே மர்ம நபர்கள் வைத்த நாட்டு வெடிகுண்டு வெடித்து பசு மாடு படுகாயம்

ஏரியூர், ஜன.28

ஏரியூர் அருகே உள்ள மஞ்சார அள்ளி ஊராட்சிக்குட்பட்ட கவுண்டனூரை சேர்ந்தவர் கோவிந்தராஜ் (48). விவசாயி இவருக்கு வளர்மதி என்ற மனைவியும் உள்ளார்.

இவர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக வனப்பகுதியையொட்டி உள்ள பகுதியில், குத்தகைக்கு விவசாயம் செய்து வருகின்றனர்.

மேலும் 10 பசு மாடுகளை வைத்து பால் கறந்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

இவர்கள் தங்களது விவசாய நிலம் அருகில், உள்ள வனப்பகுதியை ஒட்டியுள்ள பகுதிகளில் ஆடு மற்றும் மாடுகளை மேய்த்து வருவது வழக்கம்.

இந்நிலையில் நேற்று காலை வழக்கம் போல் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பினர். மேச்சலுக்குச்சென்றமாடுகள்சென்ற பகுதியில் இருந்து திடீரெனபயங்கரவெடி சத்தம் கேட்டுள்ளது. மாடுகள் அலறி கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடி உள்ளது. இதனை கண்ட விவசாயி கோவிந்தராஜ், வெடிச்சத்தம் கேட்ட பகுதிக்கு சென்று பார்த்துள்ளார். அப்போது ஒரு பசு மாட்டின் முகத்தில் வாய் பகுதி சிதறி ரத்த வெள்ளத்தில் படுகாயத்துடன் விழுந்து கிடந்துள்ளது.

அந்த இடத்தில் நாட்டு வெடிகுண்டு இருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளது. அப்பகுதியில், மர்ம நபர்கள் சிலர் நாட்டு வெடிகுண்டு பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. அதனை அறியாமல், அந்தப் பகுதிக்கு மேய்ச்சலுக்குச் சென்ற மாடு நாட்டு வெடிகுண்டை கடித்ததால் முகம் சிதறி படுகாயம் அடைந்தது தெரிய வந்துள்ளது. மற்ற மாடுகள் வெடி சத்தத்தால் சிதறி ஓடி உள்ளது. ஒரு மாடு, முழுமையாக முகம் சிதறி, பற்கள் ஆங்காங்கே சிதறி கிடந்ததைக் கண்டு கோவிந்தராஜும், அவரது மனைவி வளர்மதியும், கதறி அழுதனர்.

இதுகுறித்து கோவிந்தராஜ்ஏரியூர்போலீஸ்நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வனப்பகுதியில் உள்ள காட்டுப்பன்றிகளை வேட்டையாட வைத்த நாட்டு வெடிகுண்டா? அல்லது வேறு ஏதேனும் சமூகவிரோத செயல்களில் ஈடுபட, மர்ம நபர்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நாட்டு வெடிகுண்டா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு இதே விவசாயி வளர்த்து வந்த 21 ஆடுகளை மர்ம விலங்கு கடித்து பலியாகி உள்ளது. அதற்கான எவ்வித நிவாரணமும் கிடைக்காமல், அந்த பாதிப்பில் இருந்து விடுபடாமல் இருந்த விவசாயிக்கு, மீண்டும் நாட்டு வெடிகுண்டுக்கு ஒரு மாடு இறக்கும் தருவாயில் உள்ளது மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

நாட்டு வெடிகுண்டு வெடித்து, பசு மாடு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கும் செய்தி, ஏரியூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வேங்கைவயல் விவகாரத்தில் காவல்துறையின் கதை, வசனத்தை மக்கள் நம்பமாட்டார்கள்: அண்ணாமலை

திருப்பூர், ஜன.28

திருப்பூர் கணக்கம்பாளையத்தில் காமராஜர் கலாம் அறக்கட்டளை சார்பில் 1330 திருக்குறளையும் 1330 மாணவ, மாணவிகள் மழலை மொழியில் கூறி உலக சாதனை படைக்கும் திருக்குறள் உலக சாதனை விழாநடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பா.ஜ.க. கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை பேசியதாவது:

76வது குடியரசு தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். குழந்தைகள் சூழ்ந்திருக்கும் உலகம், பெரியவர்கள் உலகம் என இரண்டு உள்ளது. குழந்தைகள் சூழ்ந்திருக்கும் உலகம் அன்பு நிறைந்த உலகம். 1330 குழந்தைகள் மட்டுமல்ல. தந்தை, தாய், பாட்டி, தாத்தா என அனைவரின் சான்றாக ஒரு குழந்தை வந்துள்ளது.

திருக்குறள் குறித்து எவ்வளவு பேசினாலும் பத்தாது. உலகத்தில் எல்லோரும் திருக்குறளை வாழ்வியல் பொதுமறை நூலாக பார்க்கின்றனர். உங்கள் வாழ்வின் பிரச்சனைகளுக்கான தீர்வு திருக்குறளில் உள்ளது என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இன்று குடியரசு தினம். நம்மை நாம் எப்படி பாதுகாப்பது என அரசியல் மைப்புச்சட்டமாகதொகுத்து நமக்கு நாமே வழங்கிய நாள் குடியரசு தினம். மகாத்மா காந்திக்கு லியோ டால்ஸ்டாய் எழுதிய கடித்தில் திருக்குறளை மேற்கொள் காட்டி உள்ளார். திருக்குறள் என்ற வார்த்தைக்கு பதிலாக இந்து குறள் என சொல்லி உள்ளார். பிரதமர் மோடி திருவள்ளுவரை உலகம் முழுவதும் கொண்டு செல்கிறார். உலக திருவள்ளுவர் கான்பரன்ஸ் டெல்லியில் நடைபெற உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்,

தி.மு.க. என்றாலே நாடகம்பெயின்தான். வேங்கைவயல் விவகாரத்தில் தமிழக காவல்துறை எழுதியுள்ள வசனம், திரைக்கதை கருணாநிதி எழுதுவதை மிஞ்சும் அளவிற்கு உள்ளது. இத்தனை நாட்கள் இல்லாத ஆடியோ வீடியோ வெளியே வருகிறது. இதனை மக்கள் நம்பமாட்டார்கள். இது தி.மு.க. எழுதியுள்ள கதை, வசனம். ஏன்? சி.பி.ஐ. விசாரணையை தடுக்கிறீர்கள். கூட்டணி கட்சிகளே இதனை ஒப்புக்கொள்ள வில்லை என்றார்.

நயினார் நாகேந்திரன் எடப்பாடி பழனிசாமி குறித்து பேசிய கருத்துக்கு, நயினார் நாகேந்திரனுக்கு செய்து விட அதிகாரம் இல்லை என பதில் அளித்தார்.

# விவசாய விளைபொருளுக்கு உரிய ஆதார விலை வழங்க கோரி: விவசாயிகள் டிராக்டர் பேரணி



மண்ணச்ச நல்லூர், ஜன.28

விவசாய விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை வழங்க கோரியும், அதற்கான சட்டம் இயற்ற கோரியும் பஞ்சாப் மாநில விவசாய சங்க தலைவர் டல்லேவால் சாகும் வரை தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வருகிறார்

அவருக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் குடியரசு தினமான இன்று டிராக்டர் பேரணி நடைபெறும் என ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பாக அறிவிக்கப்பட்டிருந்தது

இந்நிலையில் இன்று திருச்சி நம்பர் ஒன் டோல் கேட் பகுதியில் இருந்து விவசாய சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் 20க்கும் மேற்பட்ட டிராக்டர்களின் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்ட டிராக்டர் பேரணி நடைபெற்றது.

பேரணியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு மத்திய அரசு விவசாயிகளின் உற்பத்தி பொருளுக்கு உரிய ஆதார விலையை நிர்ணயித்து சட்டமாக இயற்ற வேண்டும், மின் திருத்த சட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை தொடர்ந்து வழங்க வேண்டும்,

விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோசங்களை எழுப்பினர். திருச்சி சமயபுரம் நம்பர் ஒன் டோல்கேட் பகுதியில் இருந்து டிராக்டர் பேரணி புறப்பட்டது.

இதில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தில் மாநிலத் தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் டிராக்டர்களுடன் பங்கேற்றனர்.

சிறிது தூரம் சென்றதும் பேரணிக்கு அனுமதி இல்லை என கூறி போலீசார் தடுத்து நிறுத்தினர். இதையடுத்துவிவசாயிகள் டிராக்டரை நிறுத்திவிட்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் நம்பர் ஒன் டோல்கேட் பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# திருத்தணி: மதுக்கடையில் துளை போட்டு கொள்ளை

திருத்தணி, ஜன.28

திருத்தணி அருகே உள்ள வள்ளியம்மாபுரம், அரக்கோணம் சாலையில் டாஸ்மாக் மதுக்கடை உள்ளது. நேற்று இரவு விற்பனை முடிந்ததும் ஊழியர்கள் மதுக்கடையை பூட்டிச் சென்றனர்.

இந்த நிலையில் நேற்று நள்ளிரவு வந்த மர்ம கும்பல் மதுக்கடையின் பக்கவாட்டு சுவரில் துளை போட்டு உள்யே புகுந்தனர். அவர்கள் கடையில் இருந்து சில்லறையாக இருந்த ரூ.14 ஆயிரம் ரொக்கத்தை கொள்ளையடித்தனர்.

மேலும் அங்கிருந்த லாக்கரைஉடைக்கமுடியாததால் ஏராளமான மதுபாட்டில்களை மூட்டை கட்டி அள்ளிச் சென்றுவிட்டனர். லாக்கரில் பல லட்சம் பணம் இருந்ததாக கூறப்படுகிறது. இன்று காலை மதுக்கடையின் சுவரில் துளை போடப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அப்பகுதி மக்கள் திருத்தணி போலீசுக்கும், கடையின் சூ ப் ப ர் வை ச ர் கிரிராஜூக்கும் தகவல் தெரிவித்தனர். போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

திருத்தணி பகுதியில் கடைகளில் துளைபோட்டு கொள்ளையடிக்கும் சம்பவம் தொடர்ந்து வருகிறது. கடந்த வாரம் மத்தூர் அருகில் உள்ள டாஸ்மாக் கடையில் மர்ம நபர்கள் கடையின் சுவற்றில் துளை போட்டு புகுந்து அங்கிருந்த பணம் மற்றும் மதுபாட்டில்களை அள்ளிச்சென்றனர்.

மேலும் அங்கேயே உட்கார்ந்து விடிய விடிய மது குடித்துவிட்டு சென்று இருந்தனர். கொள்ளையர்களை பிடிக்க போலீசார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# கள்ளச்சாராய ஒழிப்பில் சிறப்பாக பணியாற்றிய 5 போலீசாருக்கு காந்தியடிகள் விருது



சென்னை, ஜன.28

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றி வரும் போலீசாருக்கு ஆண்டு தோறும் காந்தியடிகள் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பதக்கம் 5 போலீசாருக்கு வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்துக்குட்பட்ட மத்திய நுண்ணிறவு பிரிவில் பணியாற்றி வரும் இன்ஸ்பெக்டர் சின்னகாமணன், விழுப்புரம்தாலுகா போலீஸ் நிலையத்தில் சட்டம்ஒழுங்கு பிரிவில் பணியாற்றி வரும் ஏட்டு மகாமார்க்ஸ், திருச்சி துறையூர் மதுவிலக்கு பிரிவு ஏட்டு கார்த்திக், சேலம் ஆயுதப் படை இரண்டாம் காவலர்கள் சிவா, பூமாலை ஆகிய 5 பேருக்கும் காந்தியடிகள் விருதுடன், ரூ.40 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் பதக்கம் ஆகியவற்றை முதலமைச்சர் வழங்கினார்.

# ஓசூர் பகுதியில் லாரிகள் காலவரையற்ற வேலை நிறுத்தம்



ஓசூர், ஜன.28

தென்னிந்திய மோட்டார் போக்குவரத்து சங்க பொது செயலாளர் ஜி. ஆர்.சண்முகப்பா நேற்று ஓசூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஓசூர் மற்றும் கர்நாடக மாநிலம் ஆனேக்கல் பகுதி கிரஷர் உரிமையாளர்கள் ஜனவரி 1 ந் தேதி முதல் 1 டன்னுக்கு 100 ரூபாய் அதிகமாக கொடுத்தால்தான் ஜல்லி கற்கள் மற்றும் எம். சாண்ட் கொடுப்போம் என்று அறிவித்துள்ளனர். ஒரே தடவையில், ஒரு டன்னுக்கு 100 ரூபாய் உயர்த்தியது லாரி உரிமையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாளைக்கு லாரி உரிமையாளர்கள் 30 டன் ஜல்லிக் கற்கள் ஏற்றி சென்றால், 3 ஆயிரம் ரூபாய் அதிகமாக கொடுக்க வேண்டிய சூழல் உள்ளது.

இருந்த போதிலும் கிரஷர் உரிமையாளர்களிடம் பல கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தி ஒரு டன் ஜல்லிக்கு 80 ரூபாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டோம்.

ஆனால் கிரஷர் உரிமையாளர்கள் பேச்சுவார்த்தையில் இருந்து தவறி விட்டார்கள். எங்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை யை அவர்கள் மீறி விட்டார்கள், இந்த விலை உயர்வு காரணமாக ஓசூர் பகுதியில் உள்ள லாரி உரிமையாளர்கள், 3000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே கிரஷர் உரிமையாளர்கள் சமரச பேச்சுவார்த்தைக்கு வரும் வரை ஓசூர் மற்றும் ஆனேக்கல் பகுதிகளை சேர்ந்த லாரி உரிமையாளர்கள் நாளை (திங்கட் கிழமை, முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

எந்த ஜல்லி பாரமும் ஏற்றக் கூடாது. லாரிகளை வீட்டின் முன்புறமோ அல்லது செட்டுகளில் நிறுத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. வேலை நிறுத்த அறிவிப்பின்படி, சுமார் 2000 லாரிகள் ஓடாது, ஒரு நாளைக்கு 40,000 டன் அளவில் வர்த்தகம் இருக்காது.

இவ்வாறு அவர் நிருபர்களிடம் கூறினார்.

# ஆன்லைன் மோசடி விழிப்புணர்வு: நீலகிரியில் சைபர் பள்ளிக்கூடம் சைபர் கிரைம் போலீசார் ஏற்பாடு



ஊட்டி, ஜன.28

நீலகிரி மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளில்சைபர் கிளப் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வாட்ஸ் அப் குழு தொடங்கப்பட்டு அதில் ஆன்லைன் மோசடி குறித்து தகவல்கள் அனுப்பி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

பொதுமக்களிடம் சைபர் கிரைம் குறித்து தேவையான அளவு விழிப்புணர்வு இல்லாததால் குற்ற சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. எனவே நீலகிரி மாவட்டத்தில் புதிதாக சைபர் பள்ளிக்கூடம் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

அதன்படி ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரை முகநூல் நேரலை நிகழ்ச்சி மூலமாக சைபர் கிரைம் குறித்து பொதுமக்களுக்கு துறை வல்லுனர்கள் விளக்கம் அளிக்க உள்ளனர்.

இதுகுறித்து நீலகிரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு நிஷா கூறியதாவது:

நீலகிரி மாவட்ட சைபர் கிரைம் துறை சார்பில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பள்ளி, கல்லூரி மாணவமாணவிகள் மற்றும் வேலை பார்ப்பவர்கள் தங்களுக்கு எந்த சந்தேகம் என்றாலும் தொடர்பு கொள்ளலாம். சமூக வலைதளங்களில் தனிப்பட்ட தகவல்களை பகிர வேண்டாம். ஓ.டி.பி. உள்ளிட்ட தகவல்களை யாரும் கூற வேண்டாம்.

அறிமுகம் இல்லாத நபர்களிடம் வீடியோ கால் பேச வேண்டாம். சமீபகாலமாக டிஜிட்டல் கைது என்று கூறி வங்கி கணக்கில் உள்ள பணத்தை மோசடி ஆசாமிகள் தங்களுடைய வங்கி கணக்கிற்கு மாற்றி ஏமாற்றுகின்றனர்.

டிஜிட்டல் கைது என்று கூறி போலீசார் யாரும் தொடர்பு கொள்ள மாட்டார்கள். மேலும் சைபர் குற்றங்கள் மூலமாக பணம் இழப்பு ஏற்பட்டால் சைபர் கிரைம் உதவி எண் 1930ஐ உடனடியாக தொடர்பு கொண்டு புகார் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ராம் சரண் படத்திலிருந்து ஏ.ஆர்.ரகுமான் விலகலா? 'ஆர்.சி.16' படக்குழு மறுப்பு




தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான ராம் சரண் தனது 16வது படத்தில் நடித்து வருகிறார். தற்காலிகமாக ஆர்.சி 16 என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில், ஜான்வி கபூர் கதாநாயகியாக நடிக்கிறார்.

ராம் சரணுடன் ஜான்விகபூர் நடிக்கும் முதல் படம் இதுவாகும். இயக்குனர் புச்சி பாபு இயக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார்.

கடந்தசிலதினங்களாகஏ.ஆர்.ரகுமான்மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாகதேவிஸ்ரீபிரசாத்இசையமைக்கவுள்ளதாகதகவல்பரவின. ஏனென்றால் இயக்குனர் புஜ்ஜி பாபு சனா இயக்கிய 'உப்பெனா' படத்திற்கு இசையமைத்தது தேவி ஸ்ரீ பிரசாத்தான். அப்படத்தின் பாடல்கள் இணையத்தில் கொண்டாடப்பட்டன.

இந்நிலையில், இந்த தகவலுக்கு 'ஆர்.சி.16' படக்குழு மறுப்பு தெரிவித்துள்ளது. "ஏ.ஆர்.ரகுமான் மாற்றம் குறித்து வெளியான செய்தியில் உண்மையில்லை. அது வெறும் வதந்தியே" என்று படக்குழு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## 'விடாமுயற்சி' பட குழுவிற்கு நடிகர் பிருத்விராஜ் பாராட்டு



மோகன்லால் நடிப்பில், பிருத்விராஜ் இயக்கத்தில் கடந்த 2019ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'லூசிபர்'. இந்த படத்தின் மூலம் பிருத்விராஜ் இயக்குனராக அறிமுகமானார். தற்போது, இந்த படத்தின் 2ம் பாகம் தயாராகி வருகிறது. இந்த படத்திற்கு 'எல் 2 எம்புரான்' என பெயரிடப்பட்டுள்ளது. இதில், மோகன்லால், பிருத்விராஜ், மஞ்சுவாரியர், டோவினோ தாலமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படம் மார்ச் 27ம் தேதி தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. பிருத்விராஜ் இப்படத்தை இயக்குவதோடு முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார். இந்நிலையில், எல் 2 எம்புரான் படத்தின் டீசர் வெளியீட்டு விழா நேற்று நடைபெற்றது.

இதில், படக்குழுவினர் அனைவரும் கலந்துகொண்டனர். அப்போது இயக்குனர் பிருத்விராஜ் பேசுகையில், "சமீபத்தில் தமிழ் சினிமாவில் நான் பார்த்த சிறந்த டிரெய்லர்களுள் ஒன்று 'விடாமுயற்சி' டிரெய்லர். அந்த படத்திற்காக நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்' என்றார்

அஜித் நடிப்பில் மகிழ்திருமேனி இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் விடாமுயற்சி. இப்படம் அடுத்த மாதம் 6ம் தேதி வெளியாக இருக்கிறது.

## 50வது நாளை நிறைவு செய்த புஷ்பா 2



சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டுவெளியானபடம்'புஷ்பாதிரைஸ்'.இப்படம்மிகப்பெரிய வெற்றி பெற்றது. அதனை தொடர்ந்து, பிரம்மாண்ட பொருட்செலவில் 'புஷ்பா 2 தி ரூல்' படம் உருவாகியுள்ளது. கடந்த 5ந் தேதி வெளியான இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தை மைத்திரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்க, தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்திருந்தார். மேலும் சாம் சி எஸ் இப்படத்திற்கு பின்னணி இசை அமைத்திருந்தார். தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் பான் இந்தியா படமாக வெளியானது. முதல் நாளில் இருந்தே வசூலில் பட்டையை கிளப்பி வரும் இப்படம் 6 நாட்களில் ரூ.1002 கோடி வசூலை கடந்தது. இந்திய அளவில் அதிவேகமாக இந்த சாதனையை எட்டியுள்ள படம் என்ற பெருமையும் 'புஷ்பா 2' படத்திற்கு கிடைத்துள்ளது. 32 நாட்களில் இப்படம் ரூ.1831 கோடி வசூல் செய்துள்ளது.

தற்போது 50வது நாளை வெற்றிகரமாகக் கடந்துள்ளது. 1900 கோடி ரூபாய் வசூலைக் கடந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெலுங்குத் திரையுலகத்தில் 'பாகுபலி 2'படத்திற்குப் பிறகு அதிக வசூலைக் குவித்த படமாக 'புஷ்பா 2' உள்ளது.

கடந்த 50 நாட்களில் தெலுங்கில் சில முன்னணி நடிகர்களின் படங்கள் வெளிவந்தாலும் 'புஷ்பா 2' படத்திற்கான வரவேற்பு குறையாமல் இருந்தது. தெலுங்கு நடிகர்களில் பிரபாஸுக்கு அடுத்து அதிக வசூலைக் குவித்த நடிகர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் அல்லு அர்ஜுன். இந்த வசூல் சாதனையை ஜுனியர் என்டிஆர், ராம் சரண் ஆகியோரும் பெற முடியவில்லை.

## ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை: இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி



2வது ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை தொடர் (19 வயதுக்கு உட்பட்டோர்) மலேசியாவில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடித்த அணிகள் வீதம் 12 அணிகள் சூப்பர்6சுற்றுக்குமுன்னேறின.12அணிகளும்இருபிரிவாகபிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி குரூப் 1ல் இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை, வங்காளதேசம், ஸ்காட்லாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிகளும், குரூப் 2ல் தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்கா, நைஜீரியா, அயர்லாந்து, நியூசிலாந்து அணிகளும் இடம் பெற்றுள்ளன. இந்த சுற்றில் ஒரு அணி தங்கள் பிரிவில் உள்ள குறிப்பிட்ட இரு அணிகளுடன் மட்டும் மோதும். இந்த சுற்று முடிவில் இரு பிரிவிலும் டாப்2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும் சூப்பர் 6 சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் தொடங்கின.

இந்நிலையில் நடப்பு சாம்பியன் ஆன இந்திய அணி தனது முதலாவது சூப்பர் 6 சுற்று ஆட்டத்தில் வங்காளதேசத்தை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. ஏற்கனவே லீக் சுற்றில் இருந்து 4 புள்ளிகளை கொண்டு வந்திருந்த இந்திய அணி தற்போதைய வெற்றியுடன் சேர்த்து மொத்தம் 6 புள்ளிகளை பெற்றிருக்கிறது.

இதே பிரிவில் நடக்க இருந்த இலங்கை ஸ்காட்லாந்து இடையிலான ஆட்டம் மழையால் ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளும் தலா ஒரு புள்ளியை பெற்றன. இந்த ஆட்டத்தில் முடிவு கிடைக்காமல் போனதன் மூலம் குரூப்1ல் இருந்து இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் (தலா 6 புள்ளி) அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன. இந்திய அணி தனது கடைசி ஆட்டத்தில் நாளை ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

## அவர் ஒரு சூப்பர் ஸ்டார் கிரிக்கெட் வீரர் திலக் வர்மாவுக்கு ராயுடு பாராட்டு





சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 2வது 2வது டி20 போட்டியில் இந்திய அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் 166 ரன் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணிக்கு கடைசி ஓவரில் 6 ரன் தேவைப்பட்டது. அரைசதம் அடித்து களத்தில் நின்ற திலக் வர்மா கடைசி ஓவரின் முதல் பந்தில் 2 ரன்னும், 2வது பந்தில் பவுண்டரியும் அடித்து இலக்கை எட்ட வைத்தார். 72 ரன்கள் (55 பந்து, 4 பவுண்டரி, 5 சிக்சர்) திரட்டிய அவரே ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

இந்நிலையில் இந்திய அணிக்கு கிடைத்த மிகப்பெரிய சூப்பர் ஸ்டார் வீரர் திலக் வர்மா என்று முன்னாள் வீரர் ராயுடு பாராட்டியுள்ளார். மேலும் அவரை மூன்று வகையான இந்திய அணியிலும் விளையாட வைக்க வேண்டும் என்றும் அவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "திலக் வர்மா ஒரு மிகப்பெரிய சூப்பர் ஸ்டார் வீரர். அவரை நான் சிறிய வயதிலிருந்து பார்த்து வருகிறேன். அவர் அப்போதிலிருந்து மிகச்சிறப்பாக விளையாடி வருகிறார். தற்போது இந்திய அணிக்காகவும் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். சூர்யகுமார் யாதவ் கேப்டனான பிறகு அவருக்கு இன்னும் உத்வேகம் அதிகரித்துள்ளது. சூரியகுமார் யாதவின் நம்பிக்கையை காப்பாற்றும் விதமாக திலக் வர்மா அற்புதமான பேட்டியை வெளிப்படுத்தி வருகிறார். இந்திய அணிக்கு தற்போது கிடைத்துள்ள சூப்பர் ஸ்டார் திலக் வர்மாதான் அவரை ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் சேர்க்க வேண்டும். அவரிடம் அந்த அளவிற்கு மிகச்சிறப்பான திறமை உள்ளது. மூன்று வகையான இந்திய அணியிலும் அவரால் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்த முடியும்" என்று கூறினார்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: சாம்பியன் பட்டம் வென்றவர்களுக்கு பரிசுத்தொகை?



ஆண்டின் முதல்'கிராண்ட்ஸ்லாம்' ஆன ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் திருவிழா கடந்த 2 வார காலமாக மெல்போர்ன் நகரில் நடந்து வந்தது. கடந்த 6ம் தேதி தொடங்கிய இந்த தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜானிக் சினெர் சாம்பியன் பட்டம் வென்றார். அவருக்கு ரூ.19 கோடி பரிசுத்தொகை அளிக்கப்பட்டது. அதேபோல் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மேடிசன் கீஸ் சாம்பியன் பட்டம் வென்றார். அவருக்கு ரூ.18.5 கோடி பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

பெண்கள் இரட்டையர் பிரிவில் கேத்ரினா சினியகோவா (செக்குடியரசு) டெய்லர் டவுன்செண்ட் (அமெரிக்கா) ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது. இவர்களுக்கு ரூ.4½ கோடி பரிசுத்தொகையாக கிடைத்தது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.